8th September 1970]

*திரு. எம். எத்திராஜுலு : தலைவர் அவர்களே, எங்கள் ஜில்லாவில் இருக்கிற திண்டிவனம் அருகாமையில் இருக்கிற வீடுர் டாமில், அந்த பிராஜெக்டில் உள்ள விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய லாபத்தைப் போல, கோமுகி நதி விவசாயிகளுக்கும், வெல்லிங்டன் ரிசர்வாயர் விவசாயிகளுக்கும் அந்த லாபம் கிடைக்குமா என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அச்சத்தைப் போக்குவதற்கு இதிலே இடமிருக்கிறதா என்று மட்டிலும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, அதை நான் எப்படிச் சொல்ல முடியும்? வாட்டர் செஸ், நீர்த் தீர்வை மூலமாக ஏற்கனவே இருக்கிற வரியுடன் 60 சதவீதம் மேலும் போட்டால் 160 சதவீதத்திற்கு ஆகிவிட்டது. அவர்கள் விண்ணப்பம் கொடுத்ததனால் குறைந்துவிட்டது. அதனாலே இந்த ஷெட்யூலிலிருந்து எடுத்து விடுகிறோம். அதே மாதிரி கோமுகி நதி, வெல்லிங்டன் ரிசர் வாயர் இரண்டிலிருந்தும் தண்ணீர் பெறும் நிலங்களுக்கு வரி போட்டிருக்கிறதனாலே 160 சதவீதத்திற்கு மேலே வருகிறது. ஆகவே அவைகளை இந்த அட்டவணையில் குறிக்கவேண்டியிருக்கிறது. இவைகள் புதிதாக வருகின்றன. இது 160 சதவீதத்திற்குக் குறைந்ததால் வெளியே போய்விடுகிறது. இது நோட்டிஃபை செய்யப்பட்ட மசோதாதான். வேளாண்மைத் துறையில் இருக்கிறவர்கள் திறமையோடு பாடுபட்டால் லாபம் கிடைக்கும்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Additional Assessment and Additional Water Cess (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 17 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

DEPUTY CHAIRMAN : There are no recommendations to clauses 2 and 1, the Long Title and the Enacting Formula. So, the Bill will be returned to the Assembly without any recommendations.

(5) *The Tamil Nadu Electricity Duty (Validation) Bill*, 1970 (*L. A. Bill No.* 19 *of* 1970)

*மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : துணைத் தலைவரவர்களே, தமிழ் நாடு மின் சக்தித் தீர்வை (செல் திறன் ஆக்குதல்) மசோதா†, (சட்ட மன்றப் பேரவை மசோதா எண் 19/1970) பரிந்துரைகள் செய்யப் படுவதற்காக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

செங்கோட்டை வட்டத்தில் இயங்கி வந்த செங்கோட்டை மின் வழங்கு நிறுவனம், மாநிலங்கள் சீரமைப்பு செய்யப்பட்டதன் விளைவாக 1-11-1956-ஆம் நாள் அன்று இம் மாநிலத்துக்கு மாற்றப்பட்டது.

† Printed as Appendix VII.

[திரு. ஓ. பி. ராமன்] [8th September 1970

1950-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்—கொச்சி மின் சக்தித் தீர்வைச் சட்டத்தின் 3 (1) பிரிவின் கீழ் முன்னுள் திருவிதாங்கூர்—கொச்சி மாநிலத்திலுள்ள ஒவ்வொரு உரிமைதாரரும் வரையறுக்கப்பட்ட முறையில் ஒவ்வொரு மாதமும், ஒரு யூனிட்டுக்கு இரண்டணுவிற்கு மேற்பட்ட விலேயில் முந்திய தினங்களில் செய்யப்பட்ட மின்சக்தி விற்பனேகள் அனேத்தின் மீதும் யூனிட்டுக்கு 9 காசு வீதம் கணக்கிடப்பட்ட ஒரு தீர்வையை அரசுக்குச் செலுத்தவேண்டும். செங்கோட்டை மின் சக்தி வழங்கும் நிறுவனம், அது நிறுவப்பட்ட நாள் முதற்கொண்டு 1950-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்-கொச்சி மின்சக்தித் தீர்வைச்சட்டத்தின் கீழ் திருவிதாங்கூர்-கொச்சி அரசுக்குத் தீர்வை செலுத்தவில்லே. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மின் சக்தித் தீர்வைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1939) 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதற்கொண்டு, தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட பகுதி) சட்டங்கள் நீட்டிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1960) 3-ஆவது பிரிவின் கீழ் மாற்றப்பட்ட பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட்டது. எனவே, 1.11.1956 தொடங்கி 31.3.1961 அன்று முடிவடையும் கால அளவில் செங்கோட்டை மின் சக்தி வழங்கல் நிறுவனம் செலுத்த வேண்டிய மின் சக்தித் தீர்வையை வசூலிப்பது குறித்து இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. 1.4.1961 முதல் 30.11.1966 வரையுள்ள கால அளவுக்காக இந்த நிறுவனம் செலுத்தத்தக்க மின் சக்தித்தீர்வை தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மின் சக்தித் தீர்வைச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்டது. 1.12.1966 முதற்கொண்டு தொடங்கிய கால அளவுக்கான நிலுவைகளே வசூலிப்பதற்காக வருவாய் வசூல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1.11.1956 முதல் 31.3.1961 வரையிலுள்ள கால அளவிற்காக மேற்படி நிறுவனத்திடமிருந்து இந்த அரசுக்குச் சேரவேண்டிய மின் சக்தித்தீர்வை வசூலிப்பதற்காக 1956-ஆம் ஆண்டு மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின் கீழ் கண்டுள்ள விதித்துறைகளேப் பயன்படுத்த இயலாது.

1.11.1956 முதல் 31.3.1961 வரையுள்ள கால அளவிற்காகச் செங்கோட்டை மின் சக்தி வழங்கு நிறுவனத்திடமிருந்து தீர்வை நிலுவைகளே வசூலிக்க நடவடிக்கைகளே எடுத்தபோது மேற்படி நிறுவனம் 1950-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்-கொச்சி மின் சக்தித் தீர்வைச் சட்டத்தின் 3,9 (2) பிரிவுகளில் கண்டுள்ள விதித்துறைகளின் செல்திறனே ஆட்சேபித்து ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்து உயர்நீதி மன்றம் தடையாணே ஒன்றைப் பிறப்பித்தது. 1950-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்-கொச்சி மின் சக்தித் தீர்வைச் சட்டத்தின் 3-ஆவது பிரிவைச் சேர்ந்த (1), (2) உட்பிரிவுகளும், 9-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (a), (b) பகுதிகளும் தீர்வை வீதங்களினளவையும், தீர்வை வீதங்களிலிருந்து விலக்களிக்கும் வரம்பையும் கொள்கை வரையறை அல்லது கோட்பாடு எதையும் குறிப்பிடாமல் முடிவு செய்யும் அதிகாரத்தை மாநில அரசுக்கு அளித்துள்ள வரையில் வரம்புமீறிய சட்டமியற்றும் அதிகாரம் அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதென்றும், எனவே அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அவை முரணுனவை என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மனுதாரர் தொகை செலுத்த வேண்டுமெனக் கேட்கப்பட்டிருப்பது அதிகாரமின்றியும், சட்ட விரோத

8th September 1970] [திரு. ஓ. பி. ராமன்]

மான முறையிலும் செய்யப்பட்டிருப்பதாகுமென்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. கேரள அரசும் அந்த அரசுக்குச் சேரவேண்டிய தீர்வை நிலுவைகளை வசூல் செய்வதில் இதே போன்ற இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. சட்டம் தொடர்பான இந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்காக, 1965-ஆம் ஆண்டு கேரள மின்சக்தித் தீர்வை (செல் திறன்) சட்டம் இயற்றப்பட்டது. 1950-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்-கொச்சி மின்சக்தித் தீர்வைச் சட்டத்தின் கீழ் மின் சக்தி விற்பனையின்மீது தீர்வை விதித்து வசூலிப்பதைச் செல்திறனுக்கவே அச் சட்டம் இயற்றப்பட்டது.

தற்போதைய நேர்வில் 1950-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்-கொச்சி மின்சக்தித் தீர்வைச் சட்டத்தின் கீழ் தீர்வை முன்னரே விதிக்கப்பட்டது. 1962-ஆம் ஆண்டு 639-ஆம் எண் ரிட் மனுவில் சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பைக் கருதி அரசு இதில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையெல்லாம் வரி விதிப்பைச் செல்திறனுக்குவதும் விதிக்கப்பட்ட வரியை வசூலிக்க அதிகாரமளிப்பதுந்தான். எனவே 1956 நவம்பர் 1-ஆம் நாள் தொடங்கி 1961 மார்ச் 31-ஆம் நாள் அன்று முடிவடையும் கால அளவில் மேற்படி சட்டத்தின் கீழும் அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளின் கீழும் தீர்வை விதிப்பதையும் வசூல் செய்வதையும் செல்திறனுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இப்பேரவையை நான் வேண்டுகிறேன்.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Electricity Duty (Validation) Bill, 1970 (L.A. Bill No. 19 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The Bill is before the House for discussion.

*THIRU S. NARAYANASWAMY : Sir, this Bill deals with validating the collection of electricity duty made some 10 years ago. I am aware that there is nothing very much we can do about it. I fully recognise the difficulty in which the Hon. the Minister for Electricity is placed in complying with the requirements of a High Court order asking this duty to be refunded. It is not a practical proposition. Therefore, I fully recognise the difficulty, but what I want to say is that many Money Bills are made retro-active, and that every time the Government try to cancel out the High Court judgment by a Bill, what the Government are doing is to undermine people's faith in the judiciary and the judiciary's capacity to enforce its decision. On this question of electricity duty, why I am speaking at all is this. The electricity duty is levied on the quantum of electric energy which is sold to the people. This electricity duty is something about which some of us who are consumers of electricity both at the high-tension and low-tension levels have been remonstrating for years. Why do the Government have to complicate the tariff by having an electricity tax, an electricity duty, over and above a surcharge

and a coal cost surcharge in respect of thermal energy and make the life of the poor people complicated ? All I would suggest is that the Government should adjust the electricity tariffs. After all, the Government give money to the Electricity Board year after year. They are no more autonomous than some other bodies. They are supposed to be autonomous bodies for economic purposes. They are not. They get a subvention from the Government. When it is so, why do the Government want an electricity tax and appropriate it in the General Revenue and then out of the General Revenue, pay the deficit of the Electricity Board ? It is extremely complicated. I suggest that the Hon. the Minister for Electricity should apply his mind to the question of abolishing this electricity duty once and for all and have it made a part of the electricity tariff, so that the money goes straight to the Electricity Board instead of *via* the General Revenues of the Government, complicating the budget by a series of entries which could be avoided. It is very amazing that in respect of a part of a territory which once belonged to Travancore-Cochin and which has subsequently become integrated in Tamil Nadu, we try to rectify the defect in a rule that obtained in Travancore-Cochin in respect of a surcharge, and having collected it between 1956 and 1961, we are trying to validate it in a complicated way. Two things are involved in this Bill. I know this Bill has gone through the Assembly and we are here more or less as recording angels. I take this opportunity for saying that two principles incorporated here are vicious. One is that we try to neutralize the action of a judicial body. It is, after all, a small sum of money that has been collected and the Government think that the position will be otherwise difficult. Therefore, through a Money Bill, they want to neutralize the action of the judiciary. Secondly, they are trying to perpetuate the duty which should be abolished after proper consideration of the state of electricity tariff which causes so much hardship to the people. I take this opportunity for saying that this is something to which I hope and trust the Hon. the Minister for Electricity and the Government of Tamil Nadu will apply their mind to enhance the revenues of the Electricity Board and they will not complicate the Revenue Budget of the Tamil Nadu Government by having money routed through the General Revenues to the Electricity Board. Thank you.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. நாராயணசாமி அவர்கள் இந்த எலெக்டிரிசிடி டியூடி, வரி போடுவது சம்பந்தமாக அரிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் உள்ளபடியே ஒப்புக்கொள்கிறேன். திருவிதாங்கூர்-கொச்சி சமஸ்தானத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு 1956 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்ட அந்தப் பகுதியில் ஒரு தனிப்பட்ட நிறுவனத்திலிருந்து நமக்கு பாக்கியிருக்கிற நிலுவையை வசூலிப்பதற்கு சட்டத்தில் இடமில்லை. அதைத் திருவிதாங்கூர்-கொச்சி எலெக்டிரிசிடி சட்டத்தின்படி வசூலிக்க முற்பட்டபோது, ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதற்குப் பின்னாலே கேரளாவில் திருவிதாங்கூர்-

8th September 1970] [திரு. ஓ. பி. ராபன்]

கொச்சி சட்டத்தின்படி நிலுவையை வசூலிப்பதற்கு அங்கீகாரம் செய்ய மசோதா கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த முறையில் இங்கு இந்த மசோதாவைக் கொண்டு வருகிறோம். நமக்குச் சேரவேண்டிய நிலுவை டியூடி 1956-ஆம் ஆண்டிலிருந்து 1961-ஆம் ஆண்டு வரையிலும் கிட்டத்தட்ட 51 ஆயிரம் சில்லரை ரூபாய் இருக்கிறது. அதை வசூல் செய்யவேண்டுமென்றால், ஹைகோர்ட்டில் சாதகமாக இல்லாத நிலையில் சட்டத்தின் மூலமாகத்தான் வசூலிக்க முடியும் என்று மாண்பு மிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். மேற்கொண்டு இது சம்பந்தமான முறைகளை மாற்றி யமைக்கவேண்டுமென்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். அது பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்று என்று குறிப்பிட்டு இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டு மென்று கேட்டு அமர்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is —

"That the Tamil Nadu Electricity Duty (Validation) Bill, 1970 (L.A. Bill No. 19 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

DEPUTY CHAIRMAN : There are no recommendations to clauses 2, 3 and 1, the Long Title, and the Enacting Formula. So, the Bill will be returned to the Assembly without any recommendations.

(6) *The Tamil Nadu Panchayats (Second Amendment and Validation) Bill*, 1970 (*L.A. Bill No*. 20 *of* 1970)

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : சட்டப்பேரவையில் நிறை வேற்றப்பட்ட 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண் டாவது திருத்தம்-செல்திறன் ஆக்குதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 20/1970) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வரி விதிக்கப்படாத தரிசு நிலங்கள் உட்பட ஒதுக்கப்படாத எல்லாக் காடுகளும் கிராமங்களின் நலனிற்காக ஊராட்சிகளால் பேணப் படும் பொருட்டு 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத் தின் (தமிழ் நாடு 1958-ஆம் ஆண்டு 35-ஆவது சட்டம்) 72-வது பிரிவின் கீழ் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்நிலங் கள் எந்த ஒரு பொதுக் காரியத்திற்குத் தேவைப்பட்டபோதிலும், தண்டனை நடவடிக்கை மூலமாகவன்றிப் பிறவகையில் இவற்றை ஊராட்சிகளிடமிருந்து திரும்பப் பெறுவதற்குச் சட்டத்தில் விதித் துறை எதுவுமில்லை. கட்டடங்கள் கட்டுதல், தோப்புகள், பழத் தோட்டங்கள் முதலியன அமைத்தல் போன்ற காரியங்களுக்கு மட்டும் ஊராட்சிகளுக்கு இந்நிலங்கள் தேவைப்படுகின்றன; அவற்றின் தேவை கள் மிகச் சிறிதளவேயாகும். இவை சம்பந்தமாகவும், பெருமளவு

---

*Printed as Apprendix VIII.